Season Tickets in the buses of Pallavan Transport Corporation

* 19. *Q.*—THIRU L. BALARAMAN (on behalf of THIRU Y. VENKATESWARA DIKSHIDAR): Will the Hon. the Minister for Labour and Transport be pleased to state—

(*a*) whether there is any proposal to issue Season Tickets to the public as in the case of students to travel in the buses of Pallavan Transport Corporation ; and

(*b*) if so, the date from which such Season Tickets will be issued ?

பல்லவன் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பருவப் பயணச் சீட்டுகள்.

திரு. எல். பலராமன் (திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் சார்பில்): மாண்புமிகு தொழிலாளர் நலன்—போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) பல்லவன் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் மாணவர் களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பருவப் பயணச் சீட்டுகள் (Season Tickets) போல் பொதுமக்களுக்கும் கொடுக்கும் உத்தேசம் எதும் உண்டா?

(இ) ஆமெனில், எப்பொழுது முதல் கொடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) மற்றும் (இ) பல்லவன் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பயணம் செய்யும் பொது மக்களுக்கு மாதப் பருவகால பயணச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன. இப்பயணச் சீட்டுகள் ஒரு மாதத்திற்குச் செல்லுபடியாகும். 60 பயணத் தடவைகளுக்கு, 40பயணத்தடவைகளுக்குரிய கட்டணம் பெறப்படுகிறது. இந்தப் பயணச் சீட்டுக்குரிய விதிகள் மாணவர்களுக்குத் தரப்படும் பருவச் சீட்டுகளுக்கான விதிகளினின்றும் மாறுபட்டவை.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : துணைத் தலைவரவர்களே, வினா 20–ஐத் தள்ளிவைக்கும்படி வேண்டிக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: வினா 20 ஒத்தி வைக்கப்படுகிறது.

Thiru G. SWAMINATHAN : Mr. Deputy Chairman, may I know the reason why question No. 18 was postponed?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அமைச்சர் வரவில்லை. அந்தத் துறையினுடைய அமைச்சருக்கு உடல்நலமின்மையால், அவரது கோரிக்கைப்படி வினா ஒத்தி வைக்கப்படுகிறது.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.